




புதுகை
# வரலாறு நாளிதழ்

WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351








வெள்ளி ❖ பிப்ரவரி. 17, 2023 சென்னை & புதுக்கோட்டை 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 134 ❖ ரூ.10


ஈரோடு கிழக்கு இடைத்தேர்தலை நேர்மையாக நடத்த நடவடிக்கை

# பத்திரம்

## தேர்தல் ஆணைய உத்தரவாதத்தை எழுத்துபூர்வமாக தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு

சென்னை, பிப். 17–

ஈரோடுகிழக்குசட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படும் என்கிற இந்திய தேர்தல் ஆணைய உத்தரவாதத்தை எழுத்துபூர்வமாக தாக்கல் செய்ய சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



சென்னை உயர் நீதிமன்றத்தில், அதிமுக அமைப்புச்செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சி.வி. சண்முகம் தாக்கல் செய்த மனுவில், "ஈரோடு கிழக்குத்தொகுதி இடைத் தேர்தலில் மாவட்ட ஆட்சியர் மற்றும் காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் ஆளுங்கட்சிக்கு சாதகமாக செயல்படுவர். எனவே, மத்திய படைகளை தேர்தல் பணிகளில் ஈடுபடுத்த கோரி தேர்தல் ஆணையத்துக்கு மனு அளிக்கப்பட்டுள்ளது. அந்த மனுக்களை பரிசீலிக்கவும், தேர்தலை நியாயமாகவும் நேர்மையாகவும் நடத்த நடவடிக்கை எடுக்க தேர்தல் ஆணையத்துக்கு உத்தரவிட வேண்டும் என்று கோரியிருந்தார்.

இந்த வழக்கு பொறுப்புத் தலைமை நீதிபதி டி.ராஜா, நீதிபதி பரத சக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் விசாரணைக்கு வந்தது. அப்போது, சி.வி. சண்முகம் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் விஜய் நாராயண், "ஈரோடு கிழக்கு தொகுதி வாக்காளர் பட்டியலில் 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்காளர்களின் பெயர்கள் இருமுறை இடம்பெற்றுள்ளது. உயிருடன் இல்லாத 8 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் பெயர்களும், இடம் மாறிய 13 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்களின் பெயர்களும் நீக்கப்படவில்லை" என்று வாதிட்டார்.

அப்போது தேர்தல் ஆணையத்தின் தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் ஜி.ராஜகோபலன், "இரட்டைப் பதிவு உள்ளவர்களின் பட்டியல் தனியாக தயாரிக்கப்பட்டு, சம்பந்தப்பட்ட வாக்குசாவடிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளது. தேர்தல் பாதுகாப்பு பணியில் மத்திய காவல் படையை சேர்ந்த 409 பேர் ஈடுபடுத்தப்பட்டு உள்ளனர். மேலும் பறக்கும்படையினரும் கண்காணிப்பு பணியில் உள்ளனர்.

இடைத்தேர்தல் நடைமுறைகள் அனைத்தும் சிசிடிவி கேமிரா மூலம் பதிவு செய்யப்படும். புகைப்பட வாக்காளர் பட்டியல் அடிப்படையில் வாக்களிக்க, வாக்காளர்கள் அனுமதிக்கப்படுவர். கள்ளஓட்டுபோடுவதைத் தடுக்க அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளது. இடைத்தேர்தல் நியாயமாகவும், நேர்மையாகவும் நடத்தப்படும். தங்களால் முடிந்த பணிகளை சிறப்பாக செய்வோம்" என உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

அப்போது, சி.வி.சண்முகம் தரப்பில், "தேர்தல் ஆணையம் எடுத்துள்ள நடவடிக்கைகளை அறிக்கையாக தாக்கல் செய்ய உத்தரவிட வேண்டும்" என்று கோரிக்கை வைக்கப்பட்டது.

இதனை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், தேர்தல் ஆணையம் எடுத்துள்ள நடவடிக்கைகளை எழுத்துபூர்வமாக தாக்கல் செய்ய தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட்டு, விசாரணையை வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைத்தனர்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு நாளிதழ்**



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் தலைமையில் நேற்று சேலம் மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் "கள ஆய்வில் முதலமைச்சர்"திட்டத்தின் கீழ் சேலம், நாமக்கல், தர்மபுரி, மற்றும் கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்களுடான ஆய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் அமைச்சர்கள் நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், உதயநிதி ஸ்டாலின், காந்தி, மதிவேந்தன், தலைமைச் செயலாளர் இறையன்பு, வருவாய் நிர்வாக ஆணையர் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரபாகர், நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சந்திப் சக்சேனா, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வளங்கள் துறை கூடுதல் தலைமை செயலாளர் சிவ் தாஸ் மீனா, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை கூடுதல் தலைமை செயலாளர் குமார் ஜயந்த், சிறப்பு திட்டங்கள் செயலாற்று துறை முதன்மை செயலாளர் உதயச்சந்திரன், அரசுத்துறை செயலாளர் நாமக்கல் மாவட்ட கலெக்டர் ஸ்ரேயா பி. சிங், கிருஷ்ணகிரி மாவட்ட கலெக்டர் தீபக் ஜேக்கப், தர்மபுரி மாவட்ட கலெக்டர் சாந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## காவிரியில் மூழ்கி பலியான அரசு பள்ளி மாணவிகளின் குடும்பத்திற்கு அமைச்சர் ரகுபதி நிதி உதவிகளை வழங்கினார்

இலுப்பூர் , பிப். 17–

காவிரியில் மூழ்கி பலியான பிலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த 4 மாணவிகள் உயிரிழந்ததைத் தொடர்ந்து, அவர்களது குடும்பத்தினரிடம் சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி நேரில் சென்று ஆறுதல்கூறி, அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர் வட்டம், பிலிப்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியைச் சேர்ந்த, சோபியா த/பெ.வெள்ளைச்சாமி (7ம் வகுப்பு), தமிழரசி த/பெ.ராஜ்குமார் (8ம் வகுப்பு), இனியா த/பெ.மோகன்குமார் (6ம் வகுப்பு) மற்றும் லாவண்யா த/பெ.பெரியண்ணன் (6ம் வகுப்பு) ஆகிய 4 மாணவிகள் காவிரி ஆற்றில் எதிர்பாராத விதமாக உயிரிழந்த தகவலறிந்து ஆறுதல் தெரிவித்து, அரசின் நிவாரண உதவிகளை வழங்கிட உத்தரவிட்டதன்பேரில், சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்ட அமைச்சர் எஸ்.ரகுபதி, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கப்பட்ட தலா ரூ.2 இலட்சத்திற்கான காசோலைகளை மாணவிகளின் குடும்பத்தினரிடம் நேரில் சென்று ஆறுதல்கூறி, அரசின் நிவாரண உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்வில், கரூர் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். ஜோதிமணி, முன்னாள் அரசுவழக்கறிஞர் கே.கே. செல்லப்பாண்டியன், மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, வருவாய் கோட்டாட்சியர்கள் குழந்தைசாமி (இலுப்பூர்), முருகேசன் (புதுக்கோட்டை), உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## சுப்ரமணியபுரத்தில் சாலை மறியல் செய்ய திரண்டவர்கள் அதிகாரிகளின் சமரசத்தால் கலைந்து சென்றனர்

அறந்தாங்கி பிப்.17–

புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகேசுப்ரமணியபுரத்தில் சாலை மறியல் செய்ய திரண்டவர்கள் அதிகாரிகளின் சமரசத்தால் கலைந்து சென்றனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி அருகே மன்னகுடி ஊராட்சிக்குட்பட்ட சித்தகண்ணி ஏரியை மீன்பாசி ஏலம் விட பொதுப்பணித்துறை அதிகாரிகள் உரிய ஏற்பாடு செய்து வரும் நிலையில் மீன் பாசி ஏலம் விட்டால் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும் என்று காரணம் காட்டி மன்னகுடி கார்த்திகேயன் மற்றும் அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் சுப்ரமணியபுரம் கடைவீதியில் திரண்டு மறியல் செய்ய முற்பட்டபோது, அறந்தாங்கி தாசில்தார் பாலகிருஷ்ணன், டிஎஸ்பி தினேஷ்குமார் ஆகியோர் சமரசம் செய்து தாலுகா அலுவலகத்தில் பேசி தீர்த்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்ததை தொடர்ந்து பொதுமக்கள் கலைந்து சென்றனர். பொதுமக்கள் சாலை மறியல் செய்ய திரண்டதால் பரபரப்பான சூழ்நிலை ஏற்பட்டது.

## பிலிப்பைன்ஸ் நாட்டில் 6.1 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் – அயர்ந்து உறங்கிய மக்கள் வீதிகளில் தஞ்சம்

பிலிப்பைன்ஸ் பிப்.17–

அதிகாலையில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கத்தால், அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்த மக்கள் பீதியில் உறைந்தனர்.

பிலிப்பைன்ஸ் நாட்டில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. நாட்டின் மாஸ்பேட் தீவில் உள்ள மியாகா என்ற இடத்தில் 11 கி.மீட்டர் ஆழத்தில் உள்ளூர் நேரப்படி நேற்று அதிகாலை 2 மணிக்கு இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அமெரிக்க புவியியல் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.1 ஆக பதிவாகியுள்ளது. நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் குலுங்கின. இதனால் அயர்ந்து தூங்கிக் கொண்டு இருந்த மக்கள் பீதியில் உறைந்தனர்.




நிலநடுக்கத்தை தொடர்ந்து சுமார் 1 மணி நேரம் கழித்து பின் நில அதிர்வுகள் ஏற்பட்டன. இதனால் பல இடங்களில் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் தஞ்சம் அடைந்தனர். நிலநடுக்கத்தை தொடர்ந்து சுனாமி எச்சரிக்கை எதுவும் விடப்படவில்லை. நிலநடுக்கத்தால் சேதம் எதுவும் ஏற்பட்டதாக தற்போது வரை எந்த தகவலும் இல்லை. துருக்கியில் கடந்த வாரம் ஏற்பட்ட 3 சக்தி வாய்ந்த நிலநடுக்கங்களால் இதுவரை 41,000 பேர் உயிரிழந்துள்ளனர். அதே போல் நியூசிலாந்தில் 6.1 ரிக்டர் அளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் நேற்று முந்தினம் ஏற்பட்டது குறிப்பிடத்தக்கது.

கந்தர்வகோட்டை அருகே நெப்புகை ஊராட்சியில்

## கிராமாலயா தொண்டு நிறுவனத்தின் மூலம் 188 குடியிருப்புகளில் கழிப்பறையுடன் கூடிய குளியலறை திறப்பு விழா

கந்தர்வகோட்டை பிப்.17–

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை ஊராட்சி ஒன்றியம், நெப்புகை ஊராட்சியில் கிராமாலயா தொண்டு நிறுவனத்தின் மூலம் தேர்வு செய்யப்பட்ட 188 குடியிருப்புகளில் கழிப்பறையுடன் கூடிய குளியலறை கட்டி முடிக்கப்பட்டு திறப்பு விழாவும், கழிப்பறையும் குளியலறையும் கட்டிக் கொடுத்த கிராமாலயா தொண்டு நிறுவனத்திற்கு நன்றிதெரிவிக்கும்நிகழ்வும் நெப்புகை ஊராட்சி முல்லைக்காப்பட்டியில் நடைபெற்றது.



கட்டி முடிக்கப்பட்ட குளியலறையுடன் கூடிய கழிப்பறையை கந்தர்வகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதரன், கிராமாலயா தொண்டு நிறுவனத்தின் ஊழியர்கள் அனைவரும் சென்று பார்வையிட்டு நல்ல வசதியுடன் கட்டப்பட்டுள்ளதாக தொண்டு நிறுவனத்தினரை வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதரன் பாராட்டினார். மேலும் தொண்டு நிறுவன ஊழியர்கள் மூலம் கழிப்பறையின் முக்கியத்துவம் குறித்து பொதுமக்களிடையே எடுத்துக் கூறப்பட்டது.

தொண்டு நிறுவன பெண் ஊழியர்கள் மூலம் பொது மக்களுக்கு புரிகின்ற வகையில் கழிப்பறை குறித்த விழிப்புணர்வு பாடல்கள் பாடி விழிப்புணர்வு ஏற்படுத்தினார்கள். இந்த நிகழ்வில் நெப்புகை ஊராட்சி மன்ற தலைவர் ஆறுமுகம் தலைமை வகித்தார். கந்தர்வகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீதரன், வட்டார வளர்ச்சி அலுவலர் நளினி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிராமாலயா நிறுவனத்தின் சார்பில் பத்மஸ்ரீ திருச்சி தாமோதரன் கிராமாலயா நிறுவனர், ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள், தொழில்நுட்ப அலுவலர்கள், தலைமை அலுவலர் மணிகண்டன், மேலும் ஊராட்சி மன்ற தலைவர்கள் நம்புறான் பட்டி மதியழகன், சங்கம் விடுதி ஊராட்சி மன்ற தலைவர் பெருமாள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். முன்னதாக சிவனேசன் வரவேற்பு நிகழ்த்தினார். தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர் பார்வதி நன்றி தெரிவித்தார்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்







## ஆதி மகோத்சவம் என்ற பெயரிலான மெகா தேசிய பழங்குடியின திருவிழாவை பிரதமர் மோடி தொடங்கி வைத்தார்

டெல்லி பிப்.17-

டெல்லியில் ஆதி மகோத்சவம் என்ற பெயரிலான மெகா தேசிய பழங்குடியின திருவிழாவை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்தார்.



நாட்டின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றத்தில் பங்காற்றிய பழங்குடி மக்களுக்கு மதிப்பளிக்கும் வகையில், அவர்களது நலன்களுக்கான நடவடிக்கைகளை பிரதமர் மோடி முன்னின்று மேற்கொண்டு வருகிறார். இதன்படி, பழங்குடியினத்தின் கலாசாரங்களை தேசிய அளவில் காட்சிப்படுத்தும் முயற்சியாக, டெல்லியில் உள்ள மேஜர் தியான் சந்த் தேசிய அரங்கத்தில் நேற்று ஆதி மகோத்சவம் என்ற பெயரிலான மெகா தேசிய பழங்குடியின திருவிழாவை தொடங்கி வைத்தார் .

இந்நிகழ்ச்சியில் பழங்குடி கலாச்சாரம், கைவினை பொருட்கள், உணவுப் பொருட்கள், வர்த்தகம் மற்றும் பாரம்பரிய கலை ஆகியவை காட்சிப்படுத்தப்பட உள்ளன. இந்நிகழ்ச்சியானது மத்திய பழங்குடியின விவகாரங்களுக்கான அமைச்சகம் சார்பில் நேற்று தொடங்கி பிப்ரவரி 27-ந் தேதி வரை நடத்தப்படுகிறது. நிகழ்ச்சியில் 200 ஸ்டால்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மகோத்சவத்தில் ஆயிரக்கணக்கான பழங்குடியின கலைஞர்கள் பங்கு கொள்கின்றனர்.

## ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்டு சென்ற படகு கவிழ்ந்த விபத்தில் 73 அகதிகள் பலி – ஐ.நா. தகவல்

லிபியா பிப்.17-

லிபியாவில் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் வழியே சென்ற படகு கவிழ்ந்ததில் 73 அகதிகள் பலியாகி உள்ளனர் என ஐ.நா. அமைப்பு உறுதி செய்து உள்ளது.



ஆப்பிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் இருந்து மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு கடல் வழியே பயணம் மேற்கொள்கின்றனர். இதற்கு லிபியாவை ஒரு மைய புள்ளியாக வைத்துள்ளனர். லிபியா நாட்டில் உள்நாட்டு குழப்பம், கிளர்ச்சியாளர்கள் வன்முறை ஆகியவற்றால் தன்மையற்ற அரசாட்சி காணப்படுகிறது. எண்ணெய் வளமிக்க அந்நாட்டில் இருந்தும் மக்கள் தங்களை பாதுகாத்து கொள்ள வேறு நாடுகளுக்கு புலம்பெயர்ந்து வருகின்றனர். இதற்காக அவர்கள் மத்திய தரைக்கடல் வழியே ஐரோப்பிய நாடுகளுக்கு கப்பல் மற்றும் படகுகள் வழியே அகதிகளாக தப்பிச் செல்கின்றனர்.

ஆபத்து நிறைந்த இந்த பயணத்தின் போது, விபத்துகளும் ஏற்படுகின்றன. எனினும், வழியின்றி இது போன்ற வெளிநாட்டு பயணத்திற்கு பொதுமக்கள் அதிக முக்கியத்துவம் தருகின்றனர். இந்நிலையில், ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக புறப்பட்டு சென்ற படகு ஒன்று லிபியா கடற்கரை பகுதியில் கடந்த 14-ந் தேதி அன்று கவிழ்ந்துள்ளது. அவர்களை மீட்கும் பணி நடந்தது. இந்நிலையில், ஐ.நா.வுக்கான புலம்பெயர்வோர் அமைப்பு நேற்று முந்தினம் வெளியிட்டுள்ள செய்தியில், இதுவரை 11 உடல்கள் மீட்கப்பட்டு உள்ளன. 7 அகதிகள் லிபியா கடற்கரை பகுதிகளில் நீந்தி கரை சேர்ந்துள்ளனர் என தெரிவித்துள்ளது. காணாமல் போன 73 அகதிகளும் நீரில் மூழ்கி உயிரிழந்து இருக்க கூடும் என தெரிவித்து உள்ளது.

## அடுத்த 5 ஆண்டுகளில் 2 லட்சம் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல்

டெல்லி பிப்.17-

அடுத்த 5 ஆண்டுகளில், கிராமங்களில் சுமார் 2 லட்சம் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள், பால், மீன்வள கூட்டுறவு அமைப்புகள் அமைக்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.



பிரதமர் மோடி தலைமையில் மத்திய அமைச்சரவை கூட்டம் நடந்தது. அதில், 'துடிப்பான கிராமங்கள்' திட்டத்துக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. 2022-2023 நிதி ஆண்டில் இருந்து 2025-2026 நிதி ஆண்டு வரை இத்திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கு ரூ.4 ஆயிரத்து 800 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. வடக்கு எல்லையில் உள்ள 4 மாநிலங்கள் மற்றும் ஒரு யூனியன் பிரதேசத்தில் உள்கட்டமைப்பு மேம்பாடு மற்றும்வாழ்வாதாரவாய்ப்புக்கு இத்திட்டம் வழிவகுக்கும். மேலும், அங்கிருக்கும் மக்கள் வேலைக்காக இடம்பெயர்வதை தடுப்பதுடன், எல்லை பாதுகாப்பை பலப்படுத்தவும் பயன்படும். இந்தியாவில் தற்போது 63 ஆயிரம் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் இயங்கி வருகின்றன.

அடுத்த 5 ஆண்டுகளில், இன்னும் இச்சங்கங்கள் தொடங்கப்படாத கிராமங்களிலும், பஞ்சாயத்துகளிலும் 2 லட்சம் தொடக்க வேளாண் கடன் சங்கங்கள் மற்றும் பால்வள கூட்டுறவு அமைப்புகள், மீன்வளகூட்டுறவுஅமைப்புகள் ஆகியவை அமைப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்துவதும், கீழ் மட்டம் வரை அதை கொண்டு செல்வதும் திட்டத்தின் நோக்கங்கள் ஆகும். இவை விவசாயிகள் தங்கள் வருவாயை பெருக்கிக்கொள்ள பயன்படும். கிராமப்புறங்களில் வேலைவாய்ப்பை பெருக்கவும் உதவும்.

இந்தியா-சீனா இடையிலான அசல் எல்லை கோட்டை பாதுகாக்கும் இந்தோ-திபெத்திய எல்லை படையில் புதிதாக 9 ஆயிரத்து 400 வீரர்களை சேர்க்கவும், 7 புதிய படைப்பிரிவுகளை உருவாக்கவும் மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது. இந்த புதிய வீரர்கள், அசல் எல்லை கோடு பகுதியில் புதிதாக அமைக்கப்படும் 47 புறக்காவல் நிலையங்கள், படைவீரர் முகாம்கள் ஆகியவற்றில் காவல் பணிக்கு பயன்படுத்தப்படுவார்கள். இந்த தகவல்களை மத்திய அமைச்சர் அனுராக் தாக்குர் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.




## புதுக்கோட்டை 110 /22 கே.வி துணை மின் நிலையத்திற்கு உட்பட்ட பகுதிகளில் நாளை மின் விநியோகம் நிறுத்தம்

புதுக்கோட்டை பிப்.17-

புதுக்கோட்டை 110 /22 கே.வி துணை மின் நிலையத்தில் நாளை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 வரை மாதாந்திர பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளது.

இதனையடுத்து இங்கிருந்து மின் விநியோகம் செய்யப்படும் கீழராஜவீதி, தெற்கு 2 ம் வீதி, தெற்கு 3 ம் வீதி, நிஜாம் காலனி, மார்த்தாண்டபுரம், சத்தியமூர்த்தி நகர், அசோக் நகர் காந்திநகர், உசிலங்குளம், கே.எல்.கே.எஸ் நகர், திருநகர், சக்தி நகர், மேட்டுப்பட்டி, திருவப்பூர், திருக்கோகர்ணம், திலகர் திடல், செல்லப்பா நகர், அம்பாள் புரம், அடப்பன் வயல், காமராஜபுரம், போஸ் நகர், கணேஷ் நகர், கம்பன் நகர் தென்புறம் ஆகிய இடங்களில் நாளை காலை 09.00 மணி முதல் மாலை 04.00 வரை மின்விநியோகம் இருக்காது என புதுக்கோட்டை மின்வாரிய உதவி செயற்பொறியாளர் தெரிவித்துள்ளார்.

## புதுக்கோட்டையில் ஒப்பந்தத் தொழிலாளர்களை பணி நிரந்தரம் செய்யக்கோரி மின்வாரிய ஊழியர்கள் மறியல் போராட்டம் – 240 பேர் கைது

புதுக்கோட்டை, பிப்.16:-

பல ஆண்டு காலம் பணி செய்த ஒப்பந்தத் தொழிலாளர்களை பணிநிரந்தரம் செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி மின்வாரிய ஊழியர்கள் நேற்று புதுக்கோட்டையில் சிஐடியு சார்பில் மறியல் போராட்டம் நடத்தினர். இதில் 240 பேர் கைது செய்யப்பட்டனர்.



தமிழ்நாடு அரசும், மின்சார வாரியமும் அறிவித்தபடி அனைத்து ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கும் தினக்கூலி ரூ.380 வழங்க வேண்டும். கே 2 மற்றும் சிட் ஒப்பந்தப்படி பல ஆண்டுகள் பணி செய்த ஒப்பந்தப் பணியாளர்களை அடையாளம் கண்டு பணி நியமனம் வழங்கி, பணி நிரந்தரம் செய்ய வேண்டும். ஒப்பந்தத் தொழிலாளர்கள் இல்லை என்ற பொய்யான அறிக்கை அனுப்புவதைக் கைவிட்டு பணிச் சான்றிதழ் வழங்க வேண்டும்.

ஊதிய ஒப்பந்தப் பேச்சுவார்த்தையில் ஒப்பந்தத் தொழிலாளர்களின் கோரிக்கைகளுக்கு தீர்வு கண்டிட வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் தமிழ்நாடு மின் ஊழியர் மத்திய அமைப்பு (சிஐடியு) சார்பில் நேற்று மறியல் போராட்டம் நடைபெற்றது. புதுக்கோட்டை மின்வாரிய மேற்பார்வை பொறியாளர் அலுவலகம் முன்பாக நடைபெற்ற போராட்டத்திற்கு புதுக்கோட்டை கிளை திட்டத் தலைவர் எஸ்.சித்தையன் தலைமை வகித்தார்.

கோரிக்கைகளை விளக்கி செயலாளர் நடராஜன், பொருளாளர் ஆறுமுகம் ஆகியோர் பேசினர். போராட்டத்தை ஆதரித்து சிஐடியு மாநில செயலாளர் ஸ்ரீதர், மாவட்டத் தலைவர் முகமதலிஜின்னா, துணைச் செயலாளர் ரத்தினவேல் ஆகியோர் பேசினர். போராட்டத்தில் பங்கேற்ற 240 பேரை காவல்துறையினர் கைது செய்தனர்.

## தென்காசி அருகே கிணறு தோண்டும் போது வெடி விபத்தில் 3 பேர் பலி

தென்காசி பிப்.17-

தென்காசி அருகே கிணறு தோண்டும் போது வெடி வெடித்து விபத்து ஏற்பட்டது. இதில் 3 பேர் உயிரிழந்தனர்.

தென்காசி மாவட்டம், ஆலங்குளம் அருகே ராம்நகர் என்ற பகுதி உள்ளது. இங்குள்ள புதுப்பட்டி கிராமத்தில் கிணற்றுப் பாசனத்தை வைத்தே விவசாயம் செய்யப்பட்டு வருகிறது. அந்த வகையில் புதுப்பட்டி கிராமத்தில் உள்ள இடத்தில் கிணறு தோண்டும் பணி நடந்து வந்தது. இதில், ஆனையப்பபுரத்தை சேர்ந்த அரவிந்த் மற்றும் ஆலங்குளத்தை சேர்ந்த ஆசீர் சாம்சன் ஆகியோர் அங்கு கிணறு தோண்டும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது கிணறு தோண்டுவதற்காக வெடி வெடித்துள்ளனர். இதில், எதிர்பாராத விதமாக ஏற்பட்ட விபத்தில் அப்பணியில் ஈடுபட்டிருந்த அரவிந்த் மற்றும் ஆசீர் சாம்சன் உட்பட மூன்று பேர் உயிரிழந்தனர்.

## செந்துறை அருகே கீழே கிடந்த 52 ஆயிரம் ரூபாய் உரிமையாளரிடம் ஒப்படைப்பு

*அரியலூர் பிப்.17-*

*செந்துறை அருகே, கீழே கிடந்த 52 ஆயிரம் ரூபாய் பணம், அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. இது பற்றி அரியலூர் மாவட்ட காவல்துறை வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:*

*அரியலூர் மாவட்ட கூடுதல் துணை கருவூல அதிகாரியாக சுரேஷ் கண்ணன் என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவர் 15.02.2023 அன்று மாலை, செந்துறை அருகே சென்று கொண்டிருக்கும் பொழுது, கீழே கிடந்த ஹேண்ட் பேக்கை ஒன்றை பார்த்து எடுத்துள்ளார்.*

*அதில் 52 ஆயிரம் பணம், ஸ்மார்ட் போன் மற்றும் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் முதலியவை இருந்துள்ளன. அவர் உடனடியாக அரியலூர் மாவட்ட காவல் அலுவலகத்துக்கு நேரில் வந்து, இது குறித்து விவரம் தெரிவித்து ஹேண்ட் பேக்கை, காவல்துறை வசம் ஒப்படைத்தார்.*

*இதனையடுத்து ஹேண்ட் பேக்கையின் உரிமையாளர் குழுமூர் கிராமம், வடக்கு தெரு, ராஜராஜன் மகன் மதியழகன் என்பவருக்கு உடனடியாக தகவல் தெரிவிக்கப்பட்டது. உரிய விசாரணைக்கு பின்னர், அரியலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ்கான் அப்துல்லா முன்னிலையில், சுரேஷ் கண்ணன், ஹேண்ட் பேக்கை அதன் உரிமையாளர் மதியழகனிடம் ஒப்படைத்தார்.*

*அதைத் தொடர்ந்து மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெரோஸ்கான் அப்துல்லா, நேர்மையாக நடந்துகொண்ட துணைக் கருவூல அதிகாரி சுரேஷ் கண்ணன் நற்செயலை பாராட்டி, அவருக்கு சால்வை அணிவித்தார். இந்நிகழ்வின் போது, அரியலூர் மாவட்ட தனிப்பிரிவு காவல் ஆய்வாளர் செல்வகுமாரி மற்றும் உதவி ஆய்வாளர் ஆனந்தன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.*

## ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் வாக்கு சேகரிக்க வந்த அதிமுக வேட்பாளருக்கு வியாபாரிகள் எதிர்ப்பு

ஈரோடு பிப்.17-

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட அதிமுக வேட்பாளர் தென்னரசுவிற்கு வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர்.



ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலை முன்னிட்டு வேட்பாளர்கள் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில், அதிமுக வேட்பாளர் தென்னரசு வாக்கு சேகரிக்க வந்த போது வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கடந்த கொரோனா காலத்தில் காய்கறி சந்தையை ஆர்.கே.வி.சாலைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அப்போது எம்.எல்.ஏ.வாக இருந்த தென்னரசுவிடம் வியாபாரிகள் கோரிக்கை விடுத்திருந்ததாக கூறப்படுகிறது.

ஆனால், தென்னரசு தங்களது கோரிக்கைகளை நிறைவேற்றவில்லை என்று வியாபாரிகள் தரப்பில் கூறப்படுகிறது. இதன் காரணமாக பிரசாரத்தில் ஈடுபட்ட வேட்பாளர் தென்னரசுவிற்கு வியாபாரிகள் எதிர்ப்பு தெரிவித்தனர். இதனால் வேட்பாளர் அவ்விடத்தை விட்டு திரும்பிச் சென்றார்.

## சென்னையில் இனி ஒரே டிக்கெட்டில் பேருந்து, ரெயில், மெட்ரோவில் பயணம் – விரைவில் அறிமுகம்

சென்னை பிப்.17-

சென்னையில் விரைவில் ஒரே டிக்கெட் முறை அறிமுகம் செய்யப்படும் என சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் தெரிவித்துள்ளது.



சென்னையில் பேருந்து, புறநகர் ரயில், மெட்ரோ ரயில் என அனைத்திலும் ஒரே டிக்கெட்டில் பயணம் செய்யும் வகையிலான திட்டத்தை செயல்படுத்த, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் நடவடிக்கை எடுத்து வந்தது. இந்நிலையில் இந்த திட்டத்தை அமல்படுத்துவதற்கான இறுதி கட்ட பணிகள் தொடங்கியுள்ளது.

ஒரே டிக்கெட் முறையை சென்னையில் நடைமுறைப் படுத்துவதற்காக மத்திய அரசின் சென்டர் ஃபார் டெவலப்மென்ட் ஆப் அட்வான்ஸ்டு கம்யூட்டிங் நிறுவனத்துடன் ஆலோசனை நடைபெற்று வருகிறது. இதனையொட்டி ஒரே டிக்கெட் முறை விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் தெரிவித்துள்ளது.

## மாநில அரசுகள் சம்மதித்தால் ஜி.எஸ்.டி. வரம்புக்குள் பெட்ரோலிய பொருட்கள் கொண்டுவரப்படும் என்று மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதி

டெல்லி பிப்.17-

மாநில அரசுகள் சம்மதித்தால், ஜி.எஸ்.டி. வரம்புக்குள் பெட்ரோலிய பொருட்கள் கொண்டுவரப்படும் என்று நிர்மலா சீதாராமன் கூறினார்.



பெட்ரோலிய பொருட்கள், மதுபானம் போன்ற சில பொருட்கள் இன்னும் ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டு வரப்படவில்லை. முன்பு போலவே, உற்பத்தி வரி, உபரி வரி உள்ளிட்ட வரிகள்தான் விதிக்கப்பட்டு வருகின்றன. பெட்ரோலிய பொருட்களின் விலையை குறைக்க அவற்றை ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டு வர வேண்டும் என்ற கோரிக்கையை பலதரப்பினரும் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன், டெல்லியில் தொழில் அமைப்பு ஒன்றின் உறுப்பினர்களுடன் உரையாடும் நிகழ்ச்சி நடந்தது. அதில், பெட்ரோலிய பொருட்கள் குறித்து கேட்கப்பட்ட கேள்விக்கு நிர்மலா சீதாராமன் கூறியதாவது:-

மாநில அரசுகள் சம்மதம் தெரிவித்தால், பெட்ரோலிய பொருட்களை ஜி.எஸ்.டி. வரம்புக்குள் கொண்டு வர முடியும். மின்சாரம் உள்ளிட்ட துறைகளில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளை வலியுறுத்தி வருகிறோம். 'ஒரே நாடு, ஒரே ரேஷன் கார்டு' திட்டத்தை அமல்படுத்துமாறு கூறி வருகிறோம். கடந்த மூன்று, நான்கு ஆண்டுகளாக, வளர்ச்சியை அதிகரிக்கும் நோக்கத்தில் பொது மூலதன செலவுக்கு முக்கியத்துவம் அளித்து வருகிறோம். இந்த பட்ஜெட்டிலும் அதை கடைபிடித்துள்ளோம். மூலதன செலவு தான் இந்த பட்ஜெட்டின் உண்மையான நோக்கம் ஆகும். தற்போது தாக்கல் செய்யப்பட்ட 2023-2024 நிதியாண்டு பட்ஜெட்டில் மூலதன செலவுகள் 33 சதவீதமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மொத்தம் ரூ.10 லட்சம் கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## அரியலூர், செந்துறை, நடுவலூர் மற்றும் தேளூர் துணை மின் நிலையங்களுக்கு உட்பட்ட பகுதிகளில் நாளை மின் தடை

அரியலூர் பிப்.17-

அரியலூர், செந்துறை, நடுவலூர் மற்றும் தேளூர் பகுதியில் நாளை மின்சாரம் இருக்காது. இது பற்றி அரியலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.ரமண சரஸ்வதி வெளியிட்ட செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:

110/33-11 கி.வோ அரியலூர் துணை மின் நிலையத்தில், நாளை சனிக்கிழமையன்று பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால், அன்றைய தினம் அரியலூர் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான, அரியலூர் நகரில் ஒரு சில பகுதிகள் மற்றும் கயர்லாபாத், ராஜீவ்நகர், லிங்கத்தடிமேடு, வாலாஜாநகரம், வெங்கடகிருஷ்ணாபுரம், அஸ்தினாபுரம், காட்டுப்பிரிங்கியம், பெரியநாகலூர், மண்ணுழி, புதுப்பாளையம், குறிச்சிநத்தம், சிறுவளூர், பாலம்பாடி, பார்ப்பனச்சேரி, கிருஷ்ணாபுரம், ரெங்கசமுத்திரம், கல்லங்குறிச்சி, மணக்குடி, கடுகூர், கோப்பிலியன்குடிக்காடு, அயன் ஆத்தூர், ஆனந்தவாடி, சீனிவாசபுரம், பொய்யாதநல்லூர், கொளப்பாடி, ஓட்டக்கோவில், கோவிந்தபுரம், மங்கலம், தாமரைக்குளம், குறுமஞ்சாவடி ஆகிய இடங்களில் மின் விநியோகம் இருக்காது.

33/11KV தேளூர் துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான வி.கைக்காட்டி, தேளூர், கா.அம்பாபூர், பாளையக்குடி, காத்தான்குடிகாடு, காவனூர், விளாங்குடி, ஆதிச்சனூர், மணகெதி, நாச்சியார்பேட்டை, நாகமங்கலம், ஒரத்தூர், அம்பவலர் கட்டளை, உடையவர் தீயனூர், விக்கிரமங்கலம், குணமங்கலம், கடம்பூர், ஓரியூர், ஆண்டிப்பட்டாக்காடு, சுண்டக்குடி, வாழைக்குழி, வெளிப்பிரிங்கியம், நெரிஞ்சிக்கோரை, நாயக்கர்பாளையம், மயிலாண்ட கோட்டை ஆகிய இடங்களில் மின் விநியோகம் இருக்காது.

33/11KV நடுவலூர் துணை மின் நிலையங்களிலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான உல்லியக்குடி, சுத்தமல்லி, காசான்கோட்டை, கோட்டியால், கோரைக்குழி, நத்தவெளி, புளியங்குழி, கொலையனூர், சுந்தரேசபுரம், காக்காபாளையம், பருக்கல், அழிச்சுக்குழி ஆகிய இடங்களில் மின் விநியோகம் இருக்காது.

மேலும், 33/11KV செந்துறை துணை மின் நிலையத்திலிருந்து மின் விநியோகம் பெறும் பகுதிகளான இராயம்புரம், பொன்பரப்பி, குழுமூர், நின்னியூர், சோழன்குறிச்சி, அயன்தத்தனூர், வங்காரம், மருதூர், மருவத்தூர், வீராக்கண், நாகல்குழி, உஞ்சினி, நல்லாம்பாளையம், ஆனந்தவாடி, அயன்ஆத்தூர் ஆகிய ஊர்களில் நாளை காலை 09.00 மணி முதல் பணி முடியும் வரை மின் விநியோகம் இருக்காது என மாவட்ட ஆட்சித் தலைவர் பெ.ரமண சரஸ்வதி, தெரிவித்துள்ளார்.

# ஈரோடு கிழக்கு தொகுதியில் அனுமதி இன்றி திறக்கப்பட்ட திமுக, அதிமுக கட்சிகளின் தேர்தல் பணிமனைகள் மூடி சீல் வைப்பு

ஈரோடு, பிப். 17 –
ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் வருகிற 27-ந்தேதி நடைபெறுகிறது. இதற்கான அறிவிப்பை கடந்த மாதம் 18-ந்தேதி தேர்தல் ஆணையம் வெளியிட்டது. அன்று மாலை முதலே கிழக்கு தொகுதியில் தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தது.

மேலும் தேர்தல் தொடர்பாக தேர்தல் ஆணையம் கடும் கட்டுப்பாடுகளை விதித்தது. அதன்படி ரூ.50 ஆயிரத்துக்கு மேல் பணம் கொண்டு சென்றால், உரிய ஆவணங்கள் இருக்க வேண்டும். இல்லை என்றால் அவை பறிமுதல் செய்யப்படும் என்றும், மேலும் ரூ.10 ஆயிரத்துக்கும் மேல் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்படும் பரிசு பொருட்கள் பறிமுதல் செய்யப்படும் என்றும் அறிவித்தனர்.

மேலும் தேர்தல் அலுவலகம் திறப்பு, பிரசாரம், வாகனங்கள், பொதுக்கூட்டத்துக்கு முன் அனுமதி பெற வேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் தேர்தல் பிரசாரம் தற்போது தீவிரமாக நடந்து வரும் நிலையில்



தி.மு.க., அ.தி.மு.க.வினர் ஒருவர் மீது ஒருவர் மாறி, மாறி குற்றச்சாட்டுகளை கூறி வருகின்றனர்.

அ.தி.மு.க.வினர், தி.மு.க.வினர் 100-க்கும் மேற்பட்ட இடங்களில் அனுமதி இன்றி தேர்தல் அலுவலகம் திறந்து இருப்பதாக கூறினர். இதே போல் அ.தி.மு.க.வினர் மீதும் தி.மு.க.வினர் புகார் கூறி வந்தனர். இந்த நிலையில் ஈரோடு கிழக்கு தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் சிவக்குமார் அனுமதி இன்றி திறக்கப்பட்ட தேர்தல் அலுவலகங்கள் குறித்து கணக்கெடுக்க உத்தரவிட்டார். அதன்படி தேர்தல் அலுவலர்கள் தீவிரமாக கண்காணித்தனர். அப்போது தி.மு.க.வினர் 10 இடங்களிலும், அ.தி.மு.க.வினர் 4 இடங்களிலும் அனுமதி இன்றி தேர்தல் அலுவலகம் திறந்து இருப்பது தெரியவந்தது.

தி.மு.க. சார்பில் கே.எஸ். நகர், கே.என்.கே. ரோடு, பி.பி.அக்ரஹாரம் பகுதியில் உள்ள வன்னியர் தெரு, வைராபாளையத்தில் உள்ள மாரியம்மன் கோவில் அருகே உள்ள பணிமனை, அன்னை சத்யா நகர் பகுதியில் உள்ள பணிமனை, சிந்தன் நகர், வரதப்பா தெரு, பெரியார் நகர் அருகே சாந்தன் கரடு, கருங்கல்பாளையம், கள்ளுக்கடை மேடு ஆகிய இடங்களில் தி.மு.க தேர்தல் அலுவலகமும், திருவள்ளுவர் நகர், கல்யாண சுந்தரம் வீதியில் உள்ள அலுவலகம், ஆலமரத்து தெரு, மணல் மேடு ஆகிய இடங்களில் அ.தி.மு.க. தேர்தல் அலுவலகமும் அனுமதி இன்றி செயல்படுவது தெரிய வந்தது.

இதையடுத்து அந்த அலுவலகங்களுக்கு சீல் வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி இன்று காலை தேர்தல் அதிகாரிகள் அனுமதி இன்றி திறக்கப்பட்ட தேர்தல் பணிமனைகளை பூட்டி சீல் வைத்தனர்.

மேலும் அனுமதி இன்றி தேர்தல் அலுவலகம் திறந்த கட்சியினர் மீதும் போலீசார் வழக்குப்பதிவும் செய்து உள்ளனர்.



புதுவை மாநிலத்தின் காரைக்கால் மாவட்டம் தெற்கு தொகுதிக்கு உட்பட்ட கும்சகட்டளை பகுதியில் ஆதி திராவிட இனத்தை சார்ந்த சுமார் 40 குடும்பங்கள் அங்கு நீண்ட காலமாக வசித்து வருகிறார்கள். அப்பகுதி தனியாருக்கு சொந்தமான இடம் என்பதாலும் அந்த இடம் யாருக்கு சொந்தமானது என்று அடையாளம் காண முடியாததாலும் அங்கு வசிப்பவர்கள் வீடு கட்டுவதற்கு குடிசை மாற்று வாரியத்தை நாடுவதற்கும் வங்கியில் கடன்பெறுவதற்கும் முடியாத சூழ்நிலை ஏற்பட்ட காரணத்தால் அந்த இடத்தை ஆதிதிராவிடர் நலத்துறையோ அல்லது வருவாய் துறை மூலமாகவோ அந்த இடத்தை கையகப்படுத்தி அங்கு குடியிருப்பவர்களுக்கு ட.G.R. பட்டா வழங்கலாமா என்பது குறித்து போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா தலைமையிலும் தெற்கு தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஏ.எச் எம்.நாஜீம் முன்னிலையிலும் முதல் கட்ட ஆலோசனை நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் வட்டாட்சியர் மதன்குமார் மற்றும் அரசு அதிகாரிகள்மேலும் அப்பகுதியில் வசிப்பவர்கள் உடன் இருந்தனர்.

# குத்தாலம் தாலுக்கா நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விஜிலென்ஸ் அதிகாரிகள் திடீர் ஆய்வு

*தரங்கம்பாடி, பிப்.17:*
மயிலாடுதுறை மாவட்டம் தாலுகாவில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக விஜிலென்ஸ் பிரிவு அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டனர்.

குத்தாலம் தாலுக்கா பகுதியில் உள்ள பெருச்சேரி, வழுவூர், தத்தங்குடி, மங்கைநல்லூர், மேலமங்கைநல்லூர் உள்ளிட்ட பகுதியில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலைகளில் தமிழ்நாடு நுகர் பொருள் வாணிபகழகவிஜிலென்ஸ்



பிரிவு கண்காணிப்பாளர் எஸ்.சந்துரு தலைமையில், தரக்கட்டுப்பாடு ஆய்வாளர் வே.புலவேந்திரன் ஆகியோர் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும் நெல்லின் ஈரப்பதம், எடை இயந்திரம், மூட்டைகளில் எண்ணிக்கை மற்றும் பதிவேடுகளை ஆய்வு செய்தனர்.



இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வருவாய் துறையின் பணிகள் நிலுவை மற்றும் முன்னேற்றம் குறித்து மாதாந்திர ஆய்வு கூட்டம் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி தலைமையில் நடைபெற்றது. மாவட்ட வருவாய் அலுவலர் மீனாட்சி சுந்தரம், மாவட்ட வருவாய் அலுவலர் (நெடுஞ்சாலை) ராஜ்குமார், நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர் .



இராணிப்பேட்டை மாவட்டத்தில் முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகளை பெல் ஆர்.சி. மைதானத்தில் மாவட்ட ஆட்சியர் ச.வளர்மதி தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் உஷா, மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் ஞானசேகரன், பெல் கூடுதல் பொது மேலாளர், மனிதவளத்துறை செல்வம் மற்றும் ஒன்றிய கவுன்சிலர் புவனேஸ்வரி பாண்டியன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவரும் அ.இ.அ.தி.மு.க. இடைக்கால பொதுச் செயலாளர், முன்னாள் முதல்வருமான, எடப்பாடி கே.பழனிச்சாமியை வேலூர் மாநகர் மாவட்ட இலக்கிய அணி செயலாளர் எம்.எ.ராஜா, பூங்கொத்து வழங்கி வாழ்த்துகூறி சந்தித்தார்.



புதுவை மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் போதைப் பொருளை கட்டுப்படுத்துவது மற்றும் அறவே ஒழிப்பது சம்பந்தமாக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் எல்.முகம்மது மன்சூர் அவர்கள் தலைமையில் நேற்று மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் அரசு அதிகாரிகளுடன் நடைபெற்றது. இந்நிகழ்வில் முதுநிலை காவல் கண்காணிப்பாளர் மற்றும் துணை மாவட்ட ஆட்சியர் (வருவாய்) துனை மாவட்ட ஆட்சியர் (பேரிடர் மேலாண்மை) மற்றும் காவல் கண்காணிப்பாளர்கள் (வடக்கு) மற்றும் (தெற்கு) மற்றும் நலவழித்துறை, கல்வித்துறை, வருவாய் துறை உள்ளிட்ட சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகள் மற்றும் N.G.O. -க்கள் இந்த ஆலோசனை கூட்டத்தில் கலந்து கொண்டார்கள்.



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் வளர்மதி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் வருவாய் துறை மற்றும் ஊரக வளர்ச்சி அலுவலகங்களில் காகிதமில்லா கணினி வழியிலான அலுவலக அனைத்து கோப்புகள் E - Office நடைமுறை பின்பற்றுவது தொடர்பான பயிற்சி கூட்டத்தினை துவக்கி வைத்தார். உடன் ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) சுரேஷ் மற்றும் வருவாய்த்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறையினர் உள்ளனர்.



ஈரோடு மாநகரம் 39-வது வார்டுக்கு உட்பட்ட கருங்கல்பாளையம் பகுதியில் இருந்து சுமார் 200 க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் மாற்றுக் கட்சியிலிருந்து விலகி திமுக துணை பொதுச்செயலாளர் கனிமொழி எம்.பி முன்னிலையில் தங்களை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைத்து கொண்டனர். இந்நிகழ்வில் தமிழ்நாடு அமைச்சர்கள் மற்றும் பலர் உடன் இருந்தனர்.

### சாப்பிட உணவில்லாமல் இறந்த

# 2 பேரின் உடல்களுடன் 7 நாட்கள் இருந்த தாய், மகன் ஈரோடு அட்சயம் அறக்கட்டளையினர் பராமரிப்பு

ஈரோடு, பிப். 17–
கோபியில் உணவில்லாமல் இறந்த 2 பேரின் உடல்களுடன் 7 நாட்கள் இருந்த தாய், மகன் ஆகியோர் தனியார் அறக்கட்டளையிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

கோபி வண்டிப்பேட்டையை சேர்ந்தவர் மோகனசுந்தரம் (வயது 74). இவருடைய மனைவி சாந்தி (60). இவர்களுடைய மகள் சசிரேகா (35). மகன் சரவணக்குமார் (33). சசிரேகாவுக்கு திருமணம் ஆகி திருப்பூர் மாவட்டம் காங்கேயத்தில் தனது கணவர் வீட்டாருடன் வசித்து வருகிறார். உடல் நலம் சரியில்லாத காரணத்தால் சரவணக்குமாரை தன்னுடன் வைத்து மோகனசுந்தரம் பராமரித்து வந்தார். மேலும் சாந்தியின் தாயார் கனகாம்பாள் (80) என்பவரும் மோகனசுந்தரத்துடன் வசித்து வந்தார்.

முதுமை காரணமாக வேலைக்கு செல்ல முடியாததால் வீட்டில் இருந்த அனைவருமே வறுமையால் வாடினார்கள். இந்தநிலையில் உணவில்லாமல் மோகனசுந்தரமும், அவருடைய மாமியார் கனகாம்பாளும் அடுத்தடுத்து இறந்தனர். இறந்தவர்களை புதைக்க பணம் இல்லாததால் அழுகிய நிலையில் கிடந்த உடல்களுடன் 7 நாட்களாக சாந்தியும், சரவணக்குமாரும்



இருந்துள்ளனர்.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும், கோபி போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மோகனசுந்தரம், கனகாம்பாள் ஆகியோரின் உடலை கைப்பற்றி சொந்த செலவில் புதைத்தார்கள். மேலும் சாந்தி மற்றும் அவருடைய மகன் சரவணக்குமார் ஆகியோர் நிலைமையை பார்த்து அவர்களை அறக்கட்டளையிடம் ஒப்படைக்க முடிவு செய்தனர்.

ஈரோட்டில் உள்ள அட்சயம் அறக்கட்டளை நிர்வாகிகள் சாந்தி மற்றும் சரவணக்குமாரை பராமரிக்க சம்மதம் தெரிவித்தனர். இதைத்தொடர்ந்து அட்சயம் அறக்கட்டளை நிர்வாகிகள் கோபிக்கு வந்தனர். இதையடுத்து சரவணக்குமாரின் முடியை எடுத்து அவரை குளிப்பாட்டி புத்தாடைகளை அறக்கட்டளை நிர்வாகிகள் அணிவித்தனர். இதேபோல் சாந்தியையும் குளிப்பாட்டி அவருக்கும் புத்தாடைகள் அணிவித்தனர்.

ஏற்கனவே அவர்கள் 2 பேருக்கும் போலீசார் சார்பில் இட்லி வழங்கப்பட்டிருந்தது. இதனால் அவர்கள் 2 பேருக்கும் அறக்கட்டளை நிர்வாகிகள் தேனீர் அளித்தனர். அந்த தேனீரை சாந்தி வாங்கி குடித்தார். மேலும் ஒரு டம்ளரில் வழங்கப்பட்ட தேனீரை வாங்கி தன்னுடைய மகன் சரவணகுமாருக்கும் குடிக்க குடித்தார். இந்த காட்சி அங்கிருந்தவர்களை நெகிழ்ச்சி அடைய செய்தது.

பின்னர் கோபி நகராட்சி தலைவர் நாகராஜ் மற்றும் பொதுமக்கள் முன்னிலையில் சாந்தி, சரவணக்குமார் ஆகியோரை அறக்கட்டளை நிர்வாகிகளிடம் போலீசார் ஒப்படைத்தனர். முன்னதாக மணப்பாறை அப்துல்சமதுஎம். எல்.ஏ. சாந்தி, சரவணக்குமார் ஆகியோரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். சாந்தி மற்றும் அவருடைய மகன் சரவணக்குமாரை உரிய முறையில் பராமரிக்க நடவடிக்கை எடுத்த கோபி போலீசாருக்கு பொதுமக்கள் பாராட்டு தெரிவித்து உள்ளனர்.

# ஈரோட்டில் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் அதிகாரிகள் ஆய்வு

ஈரோடு, பிப். 17 –
தமிழக குடிமை பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வு துறை கூடுதல் டி.ஜி.பி.யாக அருண் பொறுப்பு ஏற்றதில் இருந்து பொது விநியோக திட்டத்தின் கீழ் மானிய விலையில் பொது மக்களுக்கு வழங்கப்படும் ரேஷன் பொருட்களை வாங்கி பதுக்கல், கடத்தல் மற்றும் விற்பனை செய்தல் சம்பந்தமான குற்றங்கள் செய்வோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் பணியாற்றும் அலுவலர்கள் விவசாயிகளிடம் போதுமான ஆவணங்களை பெற்று கொண்டு நெல் கொள்முதல் செய்ய வேண்டும். விவசாயிகளிடம் லஞ்சம் பெறக்கூடாது. விவசாயிகளை காக்க வைக்க கூடாது. வியாபாரிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யக்



கூடாது என்று உத்தரவு பிறப்பித்திருந்தார்.

அதன் பேரில் குடிமை பொருள் வழங்கல் குற்றப் புலனாய்வுத்துறை கோவை மண்டல போலீஸ் சூப்பிரண்டு பாலாஜி தலைமையில் ஈரோடு சரக துணை போலீஸ் சூப்பிரண்டு சுரேஷ்குமார், ஈரோடு போலீஸ் இன்ஸ்பெக்டர் பன்னீர்செல்வம் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக ஈரோடு மண்டல மேலாளர் பானுமதி ஆகியோர் அடங்கிய குழுவினர் ஈரோடு மாவட்டத்தில் உள்ள நசியனூர், காஞ்சி கோவில், பெத்தாம்பாளையம், பள்ளபாளையம் ஆகிய இடங்களில் செயல்படும் அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நேரடியாக சென்று ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது அங்கு விவசாயிகளிடம் இருந்து முறையாக கொள்முதல் செய்யப்படுகிறதா என ஆய்வு செய்ததுடன், அங்கிருந்த விவசாயிகளிடம் குறைகளை கேட்டு அறிந்தனர். மேலும் முறைகேட்டில் ஈடுபடும் அலுவலர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என போலீஸ் சூப்பிரண்டு பாலாஜி எச்சரிக்கை விடுத்தார்.

# எம்.பி. தேர்தலில் 25 தொகுதிகளில் பாஜக வெற்றி பெற பாடுபடுவோம்


ஊத்துக்கோட்டை, பிப். 17 –
திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், சோழவரம் வடக்கு ஒன்றிய பாஜக சார்பில் ஆரணி சாய் மஹால் திருமண மண்டபத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்துக்கு ஒன்றிய தலைவர் என்.ஜெயக்குமார் தலைமை தாங்கினார். ஒன்றிய பொதுச் செயலாளர் கிஷோர் குமார், ஒன்றிய செயலாளர் எம்.ஆர்.ராஜேஷ், ஒன்றிய துணைத்தலைவர் விவேக் அர்ஜுன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் சிறப்பு அழைப்பாளர்களாக அரசு தொடர்பு பிரிவு மாநில தலைவர் அழிஞ்சிவாக்கம் எம்.பாஸ்கர், அரசு தொடர்பு பிரிவு மாநில செயலாளர் ஆர்.சி.பாலாஜி ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாவட்ட மகளிர் அணி தலைவர் சுமதி, மாவட்ட நெசவாளர் அணி தலைவர் முனுசாமி,



மாவட்ட சிந்தனையாளர் பிரிவு தலைவர் குமார், விவசாயி அணி தலைவர் ஹரிபாபு, முன்னாள் நெசவாளர் அணி வெங்கடேசன் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, பேரூர், கிளை நிர்வாகிகளும், சார்பு அணி நிர்வாகிகளும் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் தாயார் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.கிளைக் கழகத்தை உருவாக்குவது, பூத் கமிட்டி அமைப்பது என்றும், மக்களின் அடிப்படை தேவைகளான குடிநீர் வசதி, சாலை வசதி, மருத்துவ வசதி, பேருந்து வசதி உள்ளிட்டவைகளுக்கு எதிர்க்கட்சியாக இருந்து பொது மக்களுக்கு ஆதரவாக போராடுவது என்றும், கிளைகள் தோறும் வாட்ஸ் அப் குழுவை ஏற்படுத்துவது என்றும், எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழகத்தில் பாஜக 25 இடங்களில் வெற்றி பெற அயராது பாடுபடுவோம்! என்றும், இந்தியா முழுவதும் நானூறு சட்டமன்ற தொகுதிகளில் வெற்றி பெற மக்கள் நல பணிகளை மேற்கொள்வோம்! என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேற்றப்பட்டது.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தலில் போட்டியிடும் அதிமுக வேட்பாளர் கே.எஸ். தென்னரசுவை ஆதரித்து இரட்டை இலை சின்னத்திற்கு வாக்களிக்க பொதுமக்களிடம் பி.பி.அக்ரகாரம் பகுதியில், கருங்கல்பாளையம் வண்டிபேட்டை பகுதியில் தூத்துக்குடி முன்னாள் மேயர் அந்தோணி கிரேஸ் தலைமையில் திருச்செந்தூர் தெற்கு மாவட்ட துணை மகளிர் அணி செயலாளர் ராணி, ரகுராய், ஒட்டப்பிடாரம் வடக்கு மாவட்ட ஒன்றிய துணைச் செயலாளர் சந்திரா மற்றும் பலர் வீடு வீடாக சென்று வாக்கு சேகரித்தனர். பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# மயிலாடுதுறையில் மயூர நாட்டியாஞ்சலி தொடக்க விழா

மயிலாடுதுறை, பிப்- 17;
மயிலாடுதுறை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் மகா சிவராத்திரியை முன்னிட்டு ஆண்டுதோறும் மயூர நாட்டியாஞ்சலி விழா நடைபெற்று வருகிறது. இந்த ஆண்டு சிவராத்திரியை சிறப்பிக்கும் வகையில் தென்னக பண்பாட்டு மையம், மத்திய அரசின் கலாசாரத்துறை மற்றும் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் 17-ஆம் ஆண்டு மயூர நாட்டியாஞ்சலி விழா அருள்மிகு மயூரநாதர் ஆலயத்தில் கோலாகலமாக தொடங்கியது.

துவக்க விழாவிற்கு சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதியரசரும் தமிழக அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் உயர்நிலை ஆலோசனை குழு உறுப்பினருமான முனைவர்.மதிவாணன் தலைமை வகித்தார்.



சிறப்பு விருந்தினர்களாக மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர் மகாபாரதி, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நிஷா, மூத்த பரத கலைஞர் பத்மஸ்ரீ லீலா சாம்சன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் கலந்து கொண்டு குத்துவிளக்கேற்றி நிகழ்ச்சியை தொடங்கி வைத்தனர்.

சப்தஸ்வரங்கள் அறக்கட்டளையின் கௌரவ தலைவர் விஸ்வநாதன், தலைவர் பரணிதரன், அறக்கட்டளை அறங்காவலர்கள் மருத்துவர். செல்வம், தொழிலதிபர்கள் அசோக், செந்தில்குமார், சிவபுரம் வேத சிவாகம பாடசாலை முதல்வர் சுவாமிநாத சிவாச்சாரியார், சேம்பர் ஆப் காமர்ஸ் தலைவர் செல்வம், மயூரநாதர் ஆலய துணை கண்காணிப்பாளர் கணேசன், தொழிலதிபர்கள் குமரன், மாவட்ட விளையாட்டு ஆணையக்குழு உறுப்பினர் செந்தில்குமார். அண்ணாமலை பல்கலைக்கழக இசைத்துறை தலைவர் குமார் உள்ளிட்டோர் முன்னிலை வைத்தனர்.

முதல் நாள் நாட்டியஞ்சலி விழாவில் மூத்த பாரத கலைஞர் பத்மஸ்ரீ லீலா சாம்சன் கலைப்பணிகளை பாராட்டி “மணிமேகலை பொற்சதங்கை” விருதும், பரதநாட்டிய கலைஞர் ராம கௌதன்யாவுக்கு “இளம் மயூர நர்த்தன இளவரசு” விருதும், வளரும் நாட்டிய கலைஞர் அதிதிக்கு “இளம் மயூர நாட்டியதாரகை” விருதம் வழங்கப்பட்டது.

இதே போல, நாதஸ்வர கலைஞர்கள் கிருஷ்ணகுமார், கார்த்திக் ஆகியோருக்கு “மயூர நாதஸ்வர இளவல்” விருதும், தவில் இசை கலைஞர்கள் செல்வம் மற்றும் சுமன் ஆகியோருக்கு “மயூர தவிலிசை இளவரசு” விருதும் சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை சார்பில் வழங்கப்பட்டது.

பாண்டமங்கலம் சங்கீத கலா ரத்னா ஸ்ரீ கிருஷ்ணகுமார் குழுவினரின் மங்கள இசையுடன் தொடங்கிய முதல் நாள் நிகழ்வில் கோவை, சென்னை, சேலம் உள்ளிட்ட தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்திருந்த நாட்டிய கலைஞர்களின் பாரதம், ஒடிசி, குச்சிப்புடி, மோகினி ஆட்டம் போன்ற பல்வேறு நாட்டிய நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

புதன் கிழமை தொடங்கிய மயூர நாட்டியாஞ்சலி தொடர்ந்து மூன்று நாட்கள் நடைபெற உள்ளது. இதில் தமிழகம் மட்டுமின்றி இந்தியாவின் பல்வேறு மாநிலங்களிருந்து 500க்கும் மேற்பட்ட நாட்டிய கலைஞர்கள் கலந்துகொண்டு பல்வேறு விதமான நாட்டிய நிகழ்ச்சிகளை நடத்த உள்ளனர். விழாவிற்கான ஏற்பாடுகளை சப்தஸ்வரங்கள் அறக்கட்டளை நிர்வாகிகள் செய்திருந்தனர்.

# புதுக்கோட்டை செந்துரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில் போதைபொருள் தடுப்பு விழிப்புணர்வு முகாம்



புதுக்கோட்டை பிப்.17-

புதுக்கோட்டை மாவட்டம், லெணா விலக்கில் அமைந்துள்ள செந்துரான் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப கல்லூரியில் நாட்டு நலப் பணித் திட்டம் மற்றும் ரோட்ராக்ட் சங்கம் இணைந்து 13.02.2023 (திங்கட்கிழமை) அன்று கல்லூரி வளாகத்தில் போதைபொருள் தடுப்பு விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது. இவ்விழாவில் லேணா விலக்கு பிலிவைத்தில் இயங்கி வரும் (சிஎஆர்டி) நிறுவனத்தின் தலைவர் மற்றும் இயக்குநர் இருவரும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு மாணவர்களுக்கு விழிப்புணர்வை எடுத்துரைத்தார்கள். செந்துரான் கல்லூரியில் செயல்பட்டு வரும் ரோட்ராக்ட் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கிருத்திகா தேவி வரவேற்புரை வழங்கியதோடு, விழா துவங்கியது. இதில் கல்லூரியின் முதன்மைச் செயல் அதிகாரி கார்த்திக் மற்றும் கல்லூரியின் முதல்வர். கணேஷ் பாபு இருவரும் வாழ்த்துரை வழங்கியும் அத்துடன் விழிப்புணர்வு முகாம் பற்றிய நோக்கத்தையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறை பேராசிரியர் மற்றும் நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீ வித்யா சிறப்பு விருந்தினர்களின் அறிமுக உரையை வழங்கினார். சிறப்பு விருந்தினர் ரம்யா மாதுரி பேசுகையில் இளம் பருவ மாணவர்களின் தீய பழக்க அடிமைகளை அடியோடு மாற்ற வேண்டுமென்றும் அவ்வாறு அடிமையானவர்களை உடன் இருப்பவர்கள் கரம் கோர்த்து வெளிக்கொணர வேண்டுமெனக் கூறினார். தீய பழக்கத்தை அடியோடு அழிக்கும் உறுதிமொழியை மாணவர்கள் எடுத்துக்கொள்ள வழிவகுத்தார். விழாவின் இறுதியில் கணினி அறிவியல் மற்றும் பொறியியல் துறையில் பயிலும் மாணவி ஸ்ரீநிதி நன்றி உரையினை வழங்கினார். இவ்விழாவிற்கான ஏற்பாடுகளை நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர் மற்றும் ரோட்ராக்ட் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் இருவரும் செய்திருந்தனர்.

கல்லூரியின் தலைவர் செல்வராஜ், துணைத் தலைவர் நடராஜன், மேலாண்மை இயக்குநர் வயிரவன், நிர்வாக இயக்குநர் பாண்டிகிருஷ்ணன், செயலாளர் தியாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## கறம்பக்குடி அருகே 5 வருடங்களாக

# கட்டிடம் இன்றி திறந்த வெளியில் இயங்கும் அங்கன்வாடி கட்டிடம் கட்டிதர பெற்றோர்கள் கோரிக்கை



கறம்பக்குடி பிப்17;

கறம்பக்குடி அருகே பட்டத்திக்காடு, காக்கையகோன் தெருவில் 5 வருடங்களாக அங்கன்வாடி மையம் இல்லாமல் ஆலமரத்தடியில் 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் கல்வி கற்கும் அவலநிலை உள்ளது. இதனையடுத்து அங்கன்வாடி கட்டிடம் கட்டித் தருமாறு பெற்றோர்கள் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனா்.

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி ஒன்றியம், பட்டத்திக்காடு ஊராட்சி, காக்கையகோன் தெருவில் சுமார் 200-க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இக்கிராமத்தில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி செயல்பட்டு வருகிறது. இப்பள்ளியின் வளாகத்திலேயே 25 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட அங்கன்வாடி மையம் செயல்பட்டு வந்த நிலையில் கஜா புயலின் போது அங்கன்வாடி மையம் சிதிலமடைந்து முற்றிலுமாக தரைமட்டமானது. அன்று முதல் அங்கன்வாடி குழந்தைகள் கல்வி கற்க வழியில்லாமல் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி வளாகத்தில் உள்ள ஆலமரத்திலேயே கல்வி கற்று வருகின்றனர். மேலும் குடிநீர் மற்றும் கழிவறை என எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் குக்கிராமத்தில் குழந்தைகள் தவித்து வருகின்றனர்.

இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை கோரிக்கை வைத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படாததால் அங்கன்வாடி குழந்தைகள் மரத்தடியில் அமர்ந்து கல்வி பயில கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இந்த அங்கன்வாடி மையத்தில் ஆசிரியரே யார் என்று தெரியாமல் தங்களது குழந்தைகளை மரத்தடியில் பெற்றோர்கள் விட்டு செல்வதாகவும் அவர்களை அங்கன்வாடி உதவியாளர் பார்த்துக் கொள்வதாகவும் பெற்றோர்கள் வேதனை தெரிவிக்கின்றனர். அங்கன்வாடி உதவியாளர் சமையல் வேலையை பார்ப்பாரா தங்களது குழந்தைகள் மீது கவனம் செலுத்துவாரா என்ற கேள்வி எழுப்பி உள்ளனர்.

தாங்கள் கூலி வேலை செய்து வருவதாகவும் குழந்தைகளுக்கு ஏதேனும் விபத்து நேரிட்டால் தங்களால் மருத்துவ செலவு செய்வதற்கு கூட பணம் இல்லாமல் கஷ்டப்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர். எனவே விபத்துக்கள் நேரிடுவதற்கு முன்பு தமிழக அரசு உடனடி நடவடிக்கை மேற்கொண்டு அங்கன்வாடி கட்டிடம் கட்டித் தருமாறு அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேலும் ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி மாணவர்களின் நலன் கருதி சுற்றுச் சுவர் அமைத்து தருமாறும் தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# புதுக்கோடை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரியில் புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம்



புதுக்கோட்டை , பிப்.17-

புதுக்கோடை கலைஞர் கருணாநிதி அரசு மகளிர் கலைக்கல்லூரி (தன்னாட்சி), அடையாறு புற்றுநோய் மருத்துவமனை (சென்னை), புதுக்கோட்டை புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை மையம் இணைந்து நடத்திய புற்றுநோய் விழிப்புணர்வு கருத்தரங்கம், அரசு மகளிர் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

கல்லூரி முதல்வர் முனைவர் புவனேஸ்வரி கருத்தரங்கிற்கு தலைமை வகித்தார். வாசகர் பேரவை செயலர் விஸ்வநாதன் அறிமுகவுரையாற்றினார். கருந்தரங்கில், சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துமனை, புற்றுநோய் நோய்த்தடுப்புத்துறைத் தலைவர் மருத்துவர் ஜெ.எஸ்.மல்லிகா அவர்கள் சிறப்புரையாற்றினார். அவர் தனது உரையில்

"குணப்படுத்த முடியாதது புற்றுநோய் என்று கருதப்பட்ட காலத்தில் குணப்படுத்த முடியும் என்ற நம்பிக்கையில், மன உறுதியுடன் போராடி சென்னை அடையாறு புற்று மருத்துவமனையை தொடங்கினார் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி. அது இன்று வளர்ந்து பல ஆயிரக்கணக்கான மக்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வளர்ந்து நிற்கிறது. புற்றுநோய் குணப்படுத்தக்கூடியது. அதேபோல தடுக்கவும் முடியும். புற்றுநோய் மரபுசார்ந்ததல்ல.புற்றுநோய் தொற்றுநோயுமல்ல. அது வருவதற்கு பல காரணங்கள் உண்டு. அதில் ஒன்று அதிகமான புகையிலை பயன்பாடு. முதலில் புகையிலைப் பயன்பாட்டை குறைக்க வேண்டும். முடிந்தால் தடை கூட செய்ய வேண்டும். அதன்மூலம் புற்றுநோய் வராமல் தடுக்கலாம்.

இன்று பெண்களை அதிமாகத் தாக்குவது மார்பகப்புற்றுநோயும், கருவாய்ப் புற்றுநோயுமாகும். குறிப்பாக மார்பகப்புற்றுநோய்க்கு முக்கிய காரணங்களில் ஒன்று தாய்ப்பால் கொடுப்பது (Breast feeding) குறைத்திருப்பது. அதேபோல மன அழுத்தமும் ஒன்று. முதல்நிலையிலேயே அதைக்கண்டறிந்தால் குணப்படுத்த முடியும். இதனை கருத்தில் கொண்டு தான் பல்வேறு இடங்களில் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை பரிசோதனை மையங்களைத் தொடங்கியுள்ளது. புதுக்கோட்டை பழைய மருத்துவமனை வளாகத்திலும் அந்த பரிசோதனை மையம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. இங்கே உங்களுக்கு சொல்லப்பட்ட தகவல்களை மற்றவர்களுக்கும் கொண்டு செல்ல வேண்டியது உங்களின் கடமை. அதன்மூலம் பல பேரின் உயிரைக் காப்பாற்ற முடியும் "என்றார்.

நிகழ்வில் அடையாறு புற்றுநோய் மருத்துவமனை மருத்துவர் பிரீனா மற்றும் பேராசிரியர்கள் ஏராள மாணவிகள் கலந்துகொண்டனர். கருத்தரங்கை நாட்டுநலப்பணிதிட்ட அலுவலர்கள் வசந்தகுமாரி, தவமணி, தனலட்சுமி, முத்து, யூத் ரெட்கிராஸ் ஒருங்கிணைப்பாளர் மாலதி மற்றும் புதுக்கோட்டை புற்றுநோய் ஆராய்ச்சி மற்றும் பரிசோதனை மைய்ய ஒருங்கிணைப்பாளர் வெங்கடேஷ் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.



விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் அருகில் உள்ள முல்லை நகர் மாநகராட்சி அரசு தொடக்கப்பள்ளியில் நேற்று முதலமைச்சர் காலை உணவு திட்டம் குறித்து ஆய்வு மேற்கொண்டு, பள்ளி குழந்தைகளுடன் அமர்ந்து உணவு சாப்பிட்டார். பின்னர் பள்ளி குழந்தைகளின் வருகை பதிவேடு குறித்தும், பள்ளி வளாகம் மற்றும் கழிப்பறைகள் தூய்மை குறித்தும் நேரில் பார்வையிட்டு ஆய்வும் மேற்கொண்டார்.

# கறம்பக்குடி அரசு கால்நடை மருத்துவமனையில் வெறி நோய் தடுப்பூசி மற்றும் விழிப்புணர்வு முகாம்



கறம்பக்குடி பிப்.17-

புதுக்கோட்டை மாவட்டம், கறம்பக்குடி அரசு கால்நடை மருத்துவமனையில் தேசிய வேளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கால்நடை துறை சார்பில் செல்லப் பிராணிகளுக்கு வெறிநோய் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

இந்த முகாமில் கறம்பக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் செல்லப் பிராணிகள் வளர்ப்போர் தாங்கள் வளர்க்கும் நாய்களை கொண்டு வந்து கால்நடை மருத்துவர்களிடம் பரிசோதனை செய்தனர். செல்லப் பிராணிகளுக்கு நோய் தாக்கம் மற்றும் பராமரிப்பு குறித்து செல்ல பிராணிகள் உரிமையாளர்களுக்கு கால்நடை மருத்துவர்கள் ரெங்கராஜன் மற்றும் பாண்டியராஜன் அறிவுறுத்தினர்.

இதனைத் தொடர்ந்து 100-கும் மேற்பட்ட செல்ல பிராணிகளுக்கு வெறிநோய் தடுப்பூசி இலவசமாக போடப்பட்டது. கால்நடை மருத்துவமனை அருகே உள்ள அனுமார் கோவில் ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் வெறி நாய் கடித்தால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக என்ன செய்வது என்பது குறித்து துண்டு பிரசுரங்கள் வழங்கப்பட்டது. மேலும், மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு உறுதிமொழி ஏற்கப்பட்டது.



ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத்தேர்தல் பணிகள் குறித்த ஆலோசனை கூட்டம் அஇஅதிமுக அமைப்பு செயலாளர், முன்னாள் அமைச்சர், கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.பி.வேலுமணி தலைமையில் ஈரோடு மாநகர் மாவட்ட அலுவலகத்தில் நடைபெற்றது. அவைத்தலைவர் தமிழ் மகன் உசேன் உரையாற்றினார். அனைத்து உலக எம்ஜிஆர் மன்ற மாநில துணைச் செயலாளர் அட்வகேட் ஜாகிர் உசேன், கோவை புறநகர் வடக்கு மாவட்ட அம்மா பேரவை செயலாளர் நாசர், மேட்டுப்பாளையம் நகர செயலாளர் சேட்டு ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரியில் அறிவியல் கண்காட்சி தொடக்க விழா



தென்காசி பிப்.17-

தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் அறிவியல் கண்காட்சி தொடக்க விழா நடந்தது.

விழாவிற்கு ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்வி நிறுவனங்களின் தாளாளர் மணிமாறன் தலைமை வகித்தார். தமிழ் துறை உதவி பேராசிரியர் மாலா வரவேற்றார். விழாவில் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் ரம்யா, ஓய்வு பெற்ற மாவட்ட கல்வி அலுவலர் ஷாஜகான் கபீர், ஆய்க்குடி அரசு மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர் ஞானராஜ், கடையநல்லூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியை ஜின்னி இவாஞ்சலின் ஜோஸ், புன்னையாபுரம் ஒன்றிய கவுன்சிலர் சிங்கிலிபட்டி மணிகண்டன் ஆய்வுக்கூடங்களை பார்வையிட்டு ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்,.

கொடிக்குறிச்சி ஊராட்சி மன்ற தலைவர் உடையார், செங்கோட்டை முன்னாள் யூனியன் சேர்மன் முருகையா ஆகியோர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று கண்காட்சி அரங்குகளை திறந்து வைத்து மாணவ மாணவிகளின் படைப்புகளை பார்வையிட்டனர். கல்லூரியின் முதல்வர் கோதர் முகைதீன், துணை முதல்வர் ராமர் ஆகியோர் வாழ்த்தி பேசினர். சிங்கிலிபட்டி மருதையாபாண்டி, ராணுவவீரர் மகேஷ்குமார், முத்துக்குமார், முத்துச்செல்வம் உட்பட பலர் பங்கேற்றனர். அறிவியல் கண்காட்சியில் மழை நீரின் அவசியம், சுற்றுப்புற தூய்மை, காற்று மற்றும் மரங்களின் அவசியம், மன்னர்களின் வரலாறு, பழங்கால நாணயங்கள், ஓலைச்சுவடிகள், மருத்துவம் சார்ந்த படைப்புகள் என சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட படைப்புகள் அனைத்து துறை மாணவ மாணவிகளால் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த கண்காட்சியை கடையநல்லூர் சுற்று வட்டாரத்தில் உள்ள அரசு பள்ளிகளை சேர்ந்த 10 மற்றும் 12-ஆம் வகுப்பு பயிலும் மாணவ மாணவிகள் 50 பள்ளிகளில் இருந்து சுமார் 800-க்கும் மேற்பட்டோர் பார்வையிட்டு பயன்பெற்றனர். தமிழ்த்துறை தலைவர் குமாரி வேலம்மாள் நன்றி கூறினார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேற்று சேலம் சுற்றுலா ஆய்வு மாளிகையில், சேலம் மாவட்ட தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் செயலாளர் ரவீந்திரன், தலைவர் ராமசாமி, சேலம் தாலுக்கா தனியார் பேருந்து உரிமையாளர் சங்கத்தின் தலைவர் நடராஜன், மேட்டூர் தாலுகா தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் தனக்கோடி சுப்பிரமணியம், சங்ககிரி தாலுகா தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சண்முகம், சேலம் நகர தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் இணை செயலாளர் ராஜா ஆகியோர் சந்தித்து, கோரிக்கை உனக்கு அளித்தனர். உடன் அமைச்சர்கள் கே.என். நேரு, எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், காந்தி, மதிவேந்தன் ஆகியோர் உள்ளனர்.

## புதுக்கோட்டை ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோயிலில்

# அனுமன் திருச்சபையினர் சார்பில் ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் கல்வி சங்கல்ப பூஜை



புதுக்கோட்டை பிப்.17-

புதுக்கோட்டை தெற்கு 3,4 -ஆம் வீதி மார்க்கெட் சந்திப்பில் உள்ள இந்து சமய அறநிலையத்துறை சார்ந்த ஸ்ரீ ஆஞ்சநேயர் திருக்கோவிலில் நடைபெற்ற ஸ்ரீ லக்ஷ்மி ஹயக்ரீவர் கல்வி சங்கல்ப பூஜையில் அரசு பொது தேர்வு எழுதும் 10 -ஆம் வகுப்பு, பிளஸ் 1, பிளஸ் 2 மற்றும் டி.என்.பி.எஸ்.சி, வங்கி, கல்லூரி தேர்வு எழுதும் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். ஆலயத்திலுள்ள ஸ்ரீ ஆஞ்சநேயர், ஸ்ரீ லெட்சுமி ஹயக்ரீவர் சாமிகளுக்கு அலங்கரிக்கப்பட்டு மகா தீபாராதனை நடைபெற்றது.

கல்வி சங்கல்ப பூஜையில் மாணவ, மாணவிகளுக்கு பேனா, குறிப்பேடுகள் வைத்து சிறப்பு கல்வி சங்கல்ப பூஜை கே.மணி குருக்கள் தலைமையில் நடந்தது. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மாணவ, மாணவிகளில், தேர்வில் சிறப்பாக மதிப்பெண் பெறுபவர்களுக்கு அனுமன் திருச்சபையினர் சார்பில் சுமார் 10 ஆண்டுகளாக விருதுகள் வழங்கப்படுகிறது. இதையொட்டி, மாணவ, மாணவிகளுக்கு பேனா, குறிப்பேடுகள் பிரசாதங்கள் வழங்கப்பட்டது. கல்வியாளர்கள் ஆசிரியர்கள், கல்லூரி பேராசிரியர்கள் எளிதாக மாணவ, மாணவிகளுக்கு தேர்வு எழுதும் வழிமுறைகளை பற்றி பேசினர்.

இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகிகள், இலக்கியப் பேரவை நிலவைப்பழனியப்பன் மற்றும் சுமார் 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை, அனுமன் திருச்சபையினர், ஆன்மிக நெறியாளர் ஆனந்தன் தலைமையில் நிர்வாகிகள் செய்திருந்தனர். பக்தர்கள் அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது.

# கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் ஒரு நாள் கருத்தரங்கம்



திருவரங்குளம் பிப்.17-

கைக்குறிச்சி ஸ்ரீ பாரதி கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் நுண்ணுயிரியல் துறை சார்பில் பெண்ணி ஹெசி கூட்டமைப்பு சார்பில் ஒரு நாள் கருத்தரங்கம் மிகச்சிறப்பாக நேற்று நடைபெற்றது.விழாவிற்கு கல்வி நிறுவனங்களின் தலைவர் குரு.தனசேகரன் தலைமை தாங்கினார். நிர்வாக அறங்காவலர் அ.கிருஷ்ணமூர்த்தி, இயக்குநர் மா.குமுதா, முதல்வர் செ.கவிதா, துறைத்தலைவர் மு.கீதா ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக தஞ்சாவூர் ஏ.வி.வி.எம்.ஸ்ரீபுஷ்பம் கல்லூரியின் நுண்ணுயிரியல், தாவரவியல் துறையின் உதவிப்பேராசிரியர் ச.வசந்தா கலந்து கொண்டு கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசியது-

நுண்ணுயிரியல் பற்றிய படிப்பு முன் காலத்திலிருந்தே அதன் முக்கியத்துவத்திற்காக, மருத்துவம் மற்றும் தொழில் துறைகளிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. தற்காலத்தில் இத்துறை மிகவும் விரிவடைந்து ஒரு அறிவியல் பாடமாகவும், மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக உள்ளன. கொரோனா வைரஸ் நோய்த் தொற்று உலகம் முழுவதும் பல்வேறு மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. அந்த நீட்சி சென்ற முறை மாணவர்கள் துறை தேர்ந்தெடுப்பதில் இத்துறை பெரிய வெற்றி அடைந்தது என்று தான் சொல்ல வேண்டும். ஏனென்றால் ஆய்வு மற்றும் ஆராய்ச்சி சார்ந்த விஷயங்கள் இத்துறையில் அதிகம் என்பதை யாரும் மறுப்பதற்கில்லை. நுண்ணுயிரியல் படிப்புக்கு இந்தியாவிலும், வெளிநாடுகளிலும் அதிகமான வேலை வாய்ப்புகள் உள்ளன என்று கூறினார்.

விழாவிற்கான ஏற்பாடுகளை உதவி பேராசிரியர், மற்றும் மன்ற தலைவி டி.யோகேஸ்வரி, செயலர் எம்.அலமேலு மற்றும் பலர் செய்திருந்தனர். நிகழ்ச்சியின் முன்னதாக மாணவிகள் எம். தஸீனிம்பானு வரவேற்றார், டி.பூங்கொடி நன்றி கூறினார்.

# மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூ.15.54 கோடி கடன் தள்ளுபடி, செய்யப்பட்டதற்கான சான்றிதழ் வழங்கும் விழா



கள்ளக்குறிச்சி, பிப்.17-

கள்ளக்குறிச்சி மாவட்டம், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் கூட்டுறவுதுறை சார்பில் மகளிர் சுய உதவி குழுக்களுக்கு கூட்டுறவு நிறுவனங்களின் வாயிலாக வழங்கப்பட்ட சுய உதவி குழு கடன்களுக்கான தள்ளுபடி சான்றிதழினை மாவட்ட ஆட்சித்தலைவர் ஷ்ரவன்குமார் நேற்று பயனாளிகளுக்கு வழங்கினார். மகளிர் சுய உதவி குழுக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்திடும் பொருட்டு கூட்டுறவு சங்கங்களின் வாயிலாக மகளிர் சுய உதவி குழுக்களுக்கு வழங்கப்பட்ட கடன்களை தள்ளுபடி செய்திட தமிழக அரசு உத்தரவு பிறப்பித்தது அதன்படி,

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் செயல்படும் 68 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள், 1 நகர கூட்டுறவு வங்கி, 3 மலைவாழ் மக்கள் பெரும்பல்நோக்கு கூட்டுறவு சங்கங்கள் மற்றும் விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியின் 10 கிளைகள் ஆகிய 82 கூட்டுறவு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டு 2021-ம் ஆண்டு மார்ச் 31-ம் தேதி வரை நிலுவையாக இருந்த மகளிர் சுய உதவி குழு கடன் அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின் படி தகுதி பெற்ற ஆயிரத்து 407 மகளிர் சுய உதவி குழுக்களின் 15 ஆயிரத்து 176 மகளிர் உறுப்பினர்களுக்கு அசல் தொகை ரூ 11.04 கோடி, வட்டி தொகை ரூ.5.29 கோடி அபராத வட்டி ரூ.1.17கோடி இதர செலவினம் மற்றும் கூடுதல் ரூ.2.24 இலட்சம், மொத்தம் ரூ.15.54 கோடி மகளிர் சுய உதவி குழு கடன் தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது.

மேலும், மகளிர் சுய உதவி குழு பெற்ற கடன்களுக்கான தள்ளுபடி சான்றிதழ் வழங்கும் விதமாக நேற்றையதினம் 353 மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்களுக்கு கடன் தள்ளுபடிக்கான சான்றிதழ் வழங்கப்பட்டது. என மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது இணை பதிவாளர் (கூட்டுறவு கடன் சங்கங்கள்) மீனாஅருள், விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி இணை பதிவாளர் / மேலாண்மை இயக்குநர் இளஞ்செல்வி, துணை பதிவாளர் (பொது விநியோக திட்டம்) சுரேஷ், துணை பதிவாளர் முதன்மை வருவாய் அலுவலர் (விழுப்புரம் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி) சுகந்தலதா, பொது மேலாளர் (விழுப்புரம் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி) ரவிச்சந்திரன் மற்றும் அரசு அலுவலர்கள், மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

Owned & Published by S.Sivasakthivel, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: K.selvaraj Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: S.Sivasakthivel. Phone:04322-261577.
Chennai Office: Chief Reporter S.Kadar Hussain, ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com



# தேர்தலை நேர்மையாக நடத்துவோம் நீதிமன்றத்தில் ஆணையம் உறுதி

# ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக சென்ற படகு கவிழ்ந்து 73 பேர் பலி





# மாநில அரசுகள் சம்மதித்தால் ஜிஎஸ்டி வரம்புக்குள் பெட்ரோலிய பொருட்கள்


சென்னை / புதுக்கோட்டை | 17.02.2023 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10

புதுகை வரலாறு நாளிதழ்

17.02.2023 வெள்ளி

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

கொத்தமங்கலம் சீனு , தமிழ் நாடகத், திரைப்பட நடிகர், கருநாடக இசைப் பாடகர் (பி.1910) (இ.2001)



பசவ பிரேமானந்த் , கேரள மெய்யியலாளர், இறைமறுப்பாளர் (பி.1930) (இ.2009)



வடிவேல் பாலாஜி , தமிழ் தொலைக்காட்சி நகைச்சுவை நடிகர், திரைப்பட நடிகர் (பி.1975) (இ.2020)



ஏ பி டி வில்லியர்ஸ் , தென்னாப்பிரிக்கத் துடுப்பாளர் (பி.1984)



## இன்றைய நினைவு நாள்

எஸ். வையாபுரிப்பிள்ளை , தமிழறிஞர், பதிப்பாளர் (பி.1891) (இ.1956)



ஜிட்டு கிருஷ்ணமூர்த்தி , இந்திய-அமெரிக்க மெய்யியலாளர் (பி.1895) (இ.1986)



கர்ப்பூரி தாக்கூர் , பீகாரின் 11வது முதலமைச்சர் (பி.1924) (இ.1988)

